2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் Rw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 12.03.2026

**Rw**1 **(ராஜசேகர்)**

**குறுக்கு விசாரணை (மனுதாரர்கள் தரப்பில்)**

நான் தற்போது முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிறுவனத்தில் பணியில் இல்லை. எனது முதல் விசாரணைக்கு பின் மேற்படி நிறுவனத்திலிருந்து விலகி விட்டேன். நான் 2025ம் ஆண்டு தான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்தேன். இந்த வழக்கானது 7.4.2016 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து என்னால் சொல்ல இயலாது. 3ம் எதிர்மனுதாரர் சார்பாக 16.12.2017 ல் வழக்கில் ஆஜராகியுள்ளனர் என்றால் இருக்கலாம், அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. 21.03.2018 ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்பதால் தோன்றாத் தரப்பினராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பின் 20.04.2023 ல் தோன்றாத் தரப்பினர் உத்தரவை நீக்குறவு செய்து எதிர்வழக்குரையுடன் இம எண் 4/2023 தாக்கல் செய்யப்பட்டது என்றால் இருக்கலாம் அது பற்றி நேரடியாக தெரியாது. சாதாரணமாக எங்கள் நிறுவனத்தில் விசாரணைஅதிகாரி அறிக்கை பெற்ற பின்பே வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வது வழக்கம் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் உள்ள எங்கள் நிறுவனத்தில் உள்ள நிர்வாக அதிகாரியின் பெயர் தற்போது என்னால் சொல்ல இயலாது. அந்த எதிர்வழக்குரையில் விபத்து மற்றும் காப்பீட்டு ஒத்துக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. முதலில் தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரையில் காப்பீட்டு சான்றிதழ் மோசடியானது என கட்சி எழுப்பப்படவில்லை என்றால் சரிதான். பின்னிட்ட விசாரணையில் தான் அந்த விவரம் தெரிய வந்தது. மனு தாக்கல் செய்து 7 ஆண்டுகள் கழித்து தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம் என்றால சரிதான். கூடுதல் எதிர்வழக்குரையை இம எண் 8/2024 ல் அனுமதி பெற்று 22.1.2024 ல் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்திற்கு

கோயம்புத்தூர், ஜிஜெஆர்கேட், திருசெங்கடசாமி சாலை மேற்கு, ஆர்எஸ் புரத்தில் கிளை அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். இம எண் 8/2024 மனுவில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பெறப்பட்ட பாலிசி கவர்நோட் , காப்பீட்டு சான்று, பிரிமியம் கணக்கீட்டு சான்று மற்றும் செட்டியூல் ஆகியவைகளை மனுதாரர் பெற்றுள்ளார் என்று சாட்சியிடம் மேற்படி ஆவணங்கள் காண்பிக்கப்பட்டபோது சாட்சி மேற்படி  ஆவணங்களை பார்த்துவிட்டு அது போலியான ஆவணங்கள் என கூறுகிறார். மேற்படி என்னிடம் காண்பிக்கப்பட்ட காப்பீட்டு சான்றிதழில் குறிப்பிட்டுள்ள காப்பீட்டு நிறுவனத்தின் கிளை அலுவலகத்தில் உள்ள அதிகாரிகளை விசாரித்தால் தான் அந்த ஆவணங்களின் உண்மை தன்மை பற்றி சொல்ல முடியும் என்றால் சரியல்ல, அது குறித்து என்னால் பதிலளிக்க இயலும், அனைத்து காப்பீட்டு சான்றிதழ்களும் கணிணியில் பதிவு செய்யப்பட்டுள்ளது, அதனால் அது குறித்து என்னால் சாட்சியம்அளிக்க இயலும். எங்கள் நிறுவனத்தின் பேரில் போலியான காப்பீட்டு சான்று பெறப்பட்டிருந்தால் அது குறித்து நாங்கள் குற்ற நடவடிக்கை எடுப்போம் என்றால் சரிதான். இந்த வழக்கில் முன்னிலைபடுத்தப்பட்ட காப்பீட்டு சான்று குறித்து எங்கள் நிறுவனத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. காப்பீட்டு சான்றிதழ் போலி என தெரிய வந்திருந்தால் அது குறித்து நடவடிக்கை எடுத்திருப்போம என்றும் போலி இல்லை என்பதால் தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மனு தாக்கல் செய்து 8 ஆண்டுகள் கழித்து புதிய விவரங்களை எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளோம் என்றால சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் எங்கள் நிறுவனத்தில் தான் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரருக்கு இழப்பீடு செலுத்துவதை தவிர்ப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED — Digitally signed by M ASHFAQ AHAMED Date: 2026.03.12 14:01:51 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS